**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 252 of 2018**

**Deposition of Witness P. W.3**

| | |
|---|---|
| **Name : கதிர்வேல்** | **Father/Husband's Name: சிதம்பரம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 03.02.2025**

**Accused absent. 355 BNS PFA**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது அலங்கியம் காந்திநகரில் குடியிருந்து, திருப்பூர் பனியன் கம்பேனியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 24.02.2016ம் தேதி சந்திரசேகர் என்பவர் என்னிடம் எனது Honda Unicon என்ற வாகனமான TN 78 B 0250 என்ற இரு சக்கர வாகனத்தை வாங்கிவிட்டு கிடாவெட்டு பழனி சென்று வருவதாக என்னிடம் சொல்லிவிட்டு சென்றார். பின்னர் அன்று கல்துறை பஸ்ஸ்டாப் அருகே சுமார் மாலை 4.30 மணியளவில் பழனி – தாராபுரம் நோக்கி சந்திரசேகர் என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்டி கொண்டும் அவரின் பின்னால் சண்முகம் என்பவர் அமர்ந்து வந்தார். அசோக் லேய்லாண்ட் தோஸ்த் நான்கு சக்கர வாகனம் தாராபுரத்திலிருந்து பழனி நோக்கி மேற்படி சம்பவ இடத்திற்கு வந்த போது வேகமாக வந்து மேற்படி சந்திரசேகர் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தின் மோதி விபத்துக்குள்ளானது. சந்திரசேகர் விபத்து நடந்த இடத்திலேயே இறந்துவிட்டார். பின்னர் சண்முகம் என்பவருக்கு வலது முழங்கையிலும், வலது முழங்காலிலும் காயம் ஏற்பட்டது. பின்னர் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் மேற்படி இருவரும் பழனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். நான் சம்பவத்தை கேள்விப்பட்டு பழனி அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சையில் இருந்த சண்முகம் என்பவரை பார்த்தேன். சம்பவ இடத்தில் இறந்த சந்திரசேகர் என்பவரை பிணவறையில்

வைத்திருந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. நான் விபத்து நடந்த போது நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து சம்பவம் குறித்து நான் கேள்விப்பட்ட பின்னர் சம்பவ இடம் சென்று சம்பவஇடத்தின் அருகே உள்ள நபர்கள் மூலம் சம்பவம் பற்றி தெரிந்து கொண்டேன் என்று சொன்னால் சரிதான்.

K R KALAIVANAN

Digitally signed by K R KALAIVANAN
Date: 2025.02.03 12:08:41 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி